1987 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூரைச் சுற்றி இருக்கின்ற ஊர்களில் ஏற்கனவே விடுதிகள் இருக்கின்ற காரணத்தால் தற்சமயம் உத்திரமேரூரில் விடுதி அமைக்கும் உத்தேசம் இல்லை. உத்திரமேரூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி ஒன்று இருக்கிறது. அந்த விடுதியில் 9 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால், மற்ற விவரங்கள் தரப்படும்.

நத்தம் தொகுதியில் புதிய மருத்துவமனை

165—(* வினா எண் 11798)—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி நத்தத்தில் மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 பேர்கள், அவர்கள் தொகுதிக்கு மருத்துவமனை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். இது அரசு மருத்துவமனை பற்றியது. மக்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகவாவது அமைச்சரவர்கள் இரக்கப்பட்டாவது, இந்த நத்தத்திலே மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர வேண்டும். காரணம், பிள்ளையார் நத்தத்திலிருந்து விழிநத்தம், மதுரை, திண்டுக்கல், மேலூர் அவசர சிகிச்சைக்கு செல்ல வேண்டுமென்றால் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும். மதுரைக்கோ, மேலூருக்கோ செல்ல வேண்டுமென்றாலும் அதிக தூரம் இருக்கின்ற காரணத்தால், ஏழை எளிய மக்கள் அவசரமாக நோயாளிகளை அழைத்துச் செல்ல வேண்டுமென்றாலும் ரொம்ப சிரமமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் நத்தத்திலே 40 படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவமனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 25

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். இப்போது இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை, உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவது பற்றி அரசாங்கம் விரைவிலே ஆணை பிறப்பிக்க இருக்கிறது. அரசு மருத்துவமனையாக ஆக்குவதற்கு தற்சமயம் உத்தேசம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நிதியாதாரத்திற்கேற்ப முடிவு எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஹெல்த் சென்டரையாவது அரசு மருத்துவமனையாக மாற்றி அங்கு உடனடியாக அந்த அரசு மருத்துவமனையை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்படி ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக மாற்றலாமா என்பதுபற்றி ஏற்கனவே அரசு ஒரு முடிவு எடுத்தது. ஆனால் ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்க வேண்டுமென்று, பல பேர்கள் அதை அரசு மருத்துவமனையாக ஆக்க வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்தார்கள். அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கலாம் என்றால் அதற்கும் மக்களிடமிருந்து பல இடங்களிலிருந்து ஆட்சேபணை வந்தது. இதுபற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவர் அவர்களே. அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றக்கூடிய பகுதி மக்கள் விருப்பத்தை அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மக்கள் விருப்பத்தை மட்டும் நான் கவனிக்க முடியாது. எனக்கு இருக்கின்ற துரதிஷ்டம் நிதியமைச்சர் விருப்பத்தையும் நான் கவனிக்க வேண்டியிருக்கிறது

1987 மார்ச் 25]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் கூட பெண்ணாகரம் தாலுக்கா 8 வருடங்களாக தாலுக்காவாக இருக்கிறது. அங்கே அரசு மருத்துவமனை இருக்கிறது. ஆனால் படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இல்லை. அங்கே புற நோயாளிகள் தான் வந்து செல்லுகிறார்கள். பெண்ணாகரம் ஒன்றியம் ஒரு மலைப்பகுதி ஒன்றியமாக இருப்பதால் அந்த பெண்ணாகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை, படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக ஆக்கித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரோடு நானும் அனுதாபப்படுகிறேன். ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இணக்கம் தெரிவிப்பார்களானால் அதற்கு ஆட்சேபணை இருக்காது. ஆனால் தற்சமயம் நிதியாதாரத்தைப் பொறுத்து இந்த ஆண்டு எங்கே துவக்கலாம் என்பது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து.

166—(* வினா எண். 3443)—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளத்திலிருந்து திருச்செந்தூர் வழியாக கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பேதும் இல்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சாத்தான்குளம், திசையன்விளை, உவரி,